**Kanton Bern**
**Canton de Berne**

Bildungs- und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
Abteilung Erziehungsberatung

# EB – வழிகளைக் காணுதல்

## பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு அவர்களின் அபிவிருத்திப் பாதையில் உதவுதல்

### பிள்ளைகளும் இளையோரும் சொந்தப் பொறுப்புணர்வுள்ள பெரியவர்களாக வளர்ச்சியடையும் வழியில், அவர்களுக்கு அவசியமான ஒரு நிலைமை தோன்றலாம், அதன்போது ஒரு பக்கச்சார்பற்ற உளவள ஆலோசனை உதவிக்கொள்ளும்.

பேர்ண் மாநிலத்தின் வளர்ப்பு ஆலோசனை நிலையம் (EB) ஒரு பங்களிப்பை வழங்குகின்றது, இதன்மூலம் பிள்ளைகள் மற்றும் இளையோர் அவர்களுக்கான வழிகளைக் காணுவதுடன், சாதகமான முறையில் அபிவிருத்தியடைகின்றனர். நாங்கள் வளர்ப்பு மற்றும் கல்வியை முழுவதுமாகக் கருத்திற் கொள்வதுடன், இதன்போது இதில் சம்பந்தப்படும் நபர் மற்றும் அமைப்புகளையும் கவனத்திற் கொள்கின்றோம். பிள்ளைகள் அல்லது இளையோர்கள் சிறப்பான உணர்வையும், சாதகமான அபிவிருத்தியையும் அடைவதே பிரதான விடயமாகும். சட்டரீதியாக உறுதிசெய்யப்பட்ட துறைசார் நிலையமான எமக்கு, அனைத்து பாடசாலைத் தரங்களிலும் பெற்றோர், பிள்ளைகள் மற்றும் இளையோர் அத்துடன் ஆசிரியர்களுக்கு பிரச்சினைகள் எழுந்தால், ஆலோசனை வழங்குவதுடன், உதவி நடவடிக்கைகளுக்கு விண்ணப்பிப்போம். தேவைப்படின் வேறு துறைசார் நிலையங்களுடனும் தொடர்பு கொள்வோம். திணைக்களத்தால் உத்தரவு வழங்கப்பட்டால் துறைசார் ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வழங்குவதோடு, பணிக்கப்படும் ஆலோசனைகளையும் வழங்குவோம்.

**வழிகளை விளக்குதல் - எமது அணுகுமுறை**
சம்பந்தப்பட்டவரை நாம் அவதானத்துடன் கேட்டறிவோம். அத்துடன் எந்தச் சூழமைவு தற்போதைய நிலைமைக்கு இட்டுச் சென்றது என்பது குறித்து ஒன்றுசேர்ந்து விளங்கிக்கொள்ள முயற்சிப்போம். விளங்கிக்கொள்ளல் என்பது தெரிந்து கொள்ளலாகும்.

**வழிகளைக் காணுதல் - எமது பங்களிப்பு**
நாங்கள் மிகக் கவனமாக ஆலோசனைக் கலந்துரையாடல்களை மேற்கோள்வதுடன் அதன் முடிவுகளை அறிவித்துக் கொள்வோம். பெற்றோர், பிள்ளைகள்/இளையோர் மற்றும் ஆசிரியர்களுடன் ஒன்றுசேர்ந்து ஒரு தீர்வையும் அத்துடன் இயலுமான புதிய வழிகளையும் தேடுவோம். தெரிந்துகொள்ளல் என்பது நெருங்கிச் செல்லுதலாகும்.

**வழிகளில் செல்வது – குறிக்கோள்**
இதன்போது எமது குறிக்கோள் பெற்றோர், குடும்பங்கள், பிள்ளைகள் மற்றும் இளையோர்களை வளர்ச்சிப் பாதையை ஊக்குவிக்கும் வழிகளில் செல்ல உதவுவதாகும். எங்கு தேவைப்படுகின்றதோ, அங்கு நாம் ஆழமான ஆலோசனைகளை வழங்குவதுடன், சிகிச்சை வசதிகளையும் வழங்குவோம். நெருங்கிச் செல்வதென்பது தொடர்ந்து செல்வதாகும்.

## நாங்கள் யார்

EB என்பது ஒரு பொதுப்பணி செய்யும் துறைசார்- மற்றும் ஆலோசனை நிலையமாகும். நாங்கள் எமது பிரதேச நிலையங்களில் பக்கச்சார்பற்ற உளவியல் ரீதியான – கல்வி ரீதியான முடிவுகளை, ஆய்வுகளை மற்றும் உளவளச் சிகிச்சைகளை வழங்குகின்றோம். நாங்கள் தொழில் நெறிமுறைகள் மற்றும் துறைசார் தகுதிகளைக் கொண்டிருக்கக் கடமைப்பட்டுள்ளோம். எமது உளவியல் நிபுணர்கள் இரகசியம் காப்பதற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## எதற்காக நாம் உள்ளோம்

பிரச்சினையான வளர்ப்பு நிலைமைகளின்போது, குடும்ப அழுத்தங்கள், அபிவிருத்தி- மற்றும் நடைமுறைகளில் வித்தியாசங்கள், பாடசாலையில் கற்பது- மற்றும் சித்தியடைவதில் பிரச்சினைகள் மற்றும் வேறு பிரச்சினைகளின்போது நாங்கள் உளவியல் ரீதியான உதவிகளை வழங்குகின்றோம்.

## யாருக்காக நாம் உள்ளோம்

எமது வசதிகள் நிச்சயமாக பெற்றோர், குடும்பங்கள், பிள்ளைகள் மற்றும் இளையோர்கள், இதுபோன்று பாட-சாலைகள், துறைசார் நபர்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்படுகின்றது. EB பிறப்புத் தொடக்கம் தொழில் கல்விக்கான ஆரம்ப- மற்றும் மத்தியதரப் பாடசாலைக் கல்வி நிறைவு பெறும்வரை பொறுப்புவகிக்கும். எமது சேவைகள் ஆலோசனை தேடுபவர்களுக்கு இலவசமானதாகும். திணைக்களங்கள் பணித்தால் அதற்குக் கட்டணம் அறவிடப்படும்.

## எங்கு நீங்கள் எம்மைக் கண்டுகொள்ளலாம்

பதினான்கு பிரதேச ஆலோசனை நிலையங்களில் உங்களுக்கு அண்மையாக உள்ள ஒன்றில் நீங்கள் எங்களைக் கண்டுகொள்ளலாம்.

Kanton Bern
Canton de Berne

இவ்வாறு நீங்கள் எங்களுக்கான வழியைக் கண்டுகொள்ளலாம். பேர்ண் மாநிலத்தில் வளர்ப்பு ஆலோசனைக்கான (EB/SPE) பிரதேச நிலையங்கள்

EB Bern
Effingerstrasse 12, 3011 Bern
T 031 633 41 41, eb.bern@be.ch

EB Biel
Bahnhofstrasse 50, 2502 Biel
T 031 636 15 20, eb.biel@be.ch

EB Burgdorf
Dunantstrasse 7b, 3400 Burgdorf
T 031 635 52 52, eb.burgdorf@be.ch

EB Interlaken
Bahnhofstrasse 20, 3800 Interlaken
T 031 635 36 50, eb.interlaken@be.ch

EB Ittigen
Gerbelacker 1, 3063 Ittigen
T 031 635 99 25, eb.ittigen@be.ch

EB Köniz
Waldeggstrasse 37, Postfach, 3097 Liebefeld
T 031 635 24 50, eb.koeniz@be.ch

EB Langenthal
Jurastrasse 46, 4900 Langenthal
T 031 636 15 70, eb.langenthal@be.ch

EB Langnau
Oberstrasse 20, 3550 Langnau
T 031 636 15 60, eb.langnau@be.ch

EB Spiez
Seestrasse 34, 3700 Spiez
T 031 635 99 00, eb.spiez@be.ch

EB Thun
Scheibenstrasse 11C, 3600 Thun
T 031 635 58 58, eb.thun@be.ch

SPE Bienne
Rue du Contrôle 20, 2502 Bienne
T 031 635 95 95, spe.bienne@be.ch

SPE Moutier
Rue du Moulin 2a, 2740 Moutier
T 032 493 27 78, spe.moutier@be.ch

SPE St-Imier
Rue du Vallon 26a, 2610 St-Imier
T 031 636 16 86, spe.tavannes@be.ch

SPE Tavannes
Grand Rue 4, 2710 Tavannes
T 031 636 16 86, spe.tavannes@be.ch

**வழிகளைக் காணுதல்**

வளர்ப்பு ஆலோசனை என்பது பேர்ண் மாநில கல்விப் பகுதியின் ஒரு உதவிச் சேவையாகும்.

www.be.ch/erziehungsberatung
www.be.ch/spe